பாடம் : தமிழ்மொழி

ஆண்டு : 4

நடவடிக்கை : சரியான பதிலைக் கொண்டு நிறைவு செய்க

## வாசிக்கும் பழக்கம்

'ஓதாமல் 1.________________ இருக்க வேண்டாம்' என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் அருள் மொழியாகும். நாம் நாள்தோறும் 2.________________பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதனால் நம் அறிவு வளரும்.

'இளமையில் கல்வி 3.________________ எழுத்து' என்பது பழமொழியாகும். மாணவப் பருவத்தில் இருக்கும்போதே 4.__________________ மிகுதியான ஈடுபாடும், அக்கறையும் முயற்சியும் கொண்டு கற்றால் எதிர்காலத்தில் சிறந்த நிலையை அடையலாம். பள்ளியில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் 5.______________________ சென்று படிக்கலாம்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு. என்பது போல நாம் எந்த அளவுக்குத் தோண்டுகிறோமோ அந்த அளவுக்கு நீர் 6.____________ ஊறும். அதுபோல எந்த அளவுக்குக் கல்வி கற்கிறோமோ அந்த அளவுக்கு 7.____________________பெருகும். ஆகவே, நாம் நேரத்தை 8.________________ செய்வதை விட வாசிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளலாம். இதனால் நம் கல்வியறிவையும் பொது அறிவையும் 9.________________________முடியும்.

நமது அரசாங்கம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கப் பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மாவட்டம்தோறும் 10.______________________ அமைத்துள்ளது. இவற்றை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ், மலாய், ஆங்கிலம் ஆகிய 11._________________ நூல்களையும் படித்து வருவது மிகுந்த 12._________________ அளிக்கும். இதனால் மும்மொழிகளிலும் நாம் சிறந்து விளங்க முடியும்.

நாம் பல இன மக்களோடு எளிமையாக 13._______________ நட்புறவை மேம்படுத்தவும் சுலபமாக இருக்கும். அது மட்டுமல்லாது நம் 14.______________ உயருகிறது. ஆகவே, மனிதர்களாகிய நாம் கண்டிப்பாக 15.____________________ பெற்றிருக்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உரையாடவும் | மும்மொழி | மணற்கேணியில் | பொது நூல்நிலையம் | கல்வித் தரமும் |
| வளப்படுத்த | ஒருநாளும் | அறிவு | வாசிக்கும் | கல்வியில் |
| விரையம் | பலனை | நூல்நிலையத்திற்குச் | கல்வியறிவைப் | சிலைமேல் |

LIVEWORKSHEETS